# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
Ang Mo Kio Tamil Methodist Church

28th ஏப்ரல் / April 2024 ஞா யிறு ஆராதனை

## Methodist Welfare Society Sunday

| | |
|---|---|
| † **ஆராதனைக்கு அழைப்பு** Call to Worship | **மிஸ். கிறிஸ்டின் அம்மனி** *Miss. Christine Ammani* |
| **இறைவணக்கப்பாடல்** Introit | **பாடகர் குழு** Choir |
| **ஜெபம்** Prayer | **மிஸ். கிறிஸ்டின் அம்மனி** *Miss. Christine Ammani* |
| † **தொடக்க பாடல்** Opening Song | **சபையார் இணைந்து** Congregation |

### என்முன்னே மேய்ப்பர் போகிறார்

*1. என்முன்னே மேய்ப்பர் போகிறார்;*
*நல் மேய்ப்பராகக் காக்கிறார்;*
*ஓர்காலும் என்னைக் கைவிடார்;*
*நேர் பாதை காட்டிப் போகிறார்.*

**முன் செல்கின்றார்! முன் செல்கின்றார்!**
**என் முன்னே சென்று போகிறார்!**
**நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்,**
**அன்போடு பின்சென்றேகுவேன்.**

*2. கார் மேகம் வந்து மூடினும்,*
*சீர் ஜோதி தோன்றி வீசினும்,*
*என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்;*
*என்றைக்கும் முன்னே போகிறார்.*

*3. மெய்ப் பாதைகாட்டி!*
*பின்செல்வேன்,*
*தெய்வீக கையால் தாங்குமேன்;*
*எவ்விக்கினம் வந்தாலும் நீர்*
*இவ்வேழைமுன்னே போகிறீர்.*

*4. ஒப்பற்ற உம் காருணியத்தால்*
*இப்பூமி பாடு தீருங்கால்,*
*நீர் சாவை வெல்லச் செய்குவீர்,*
*பேரின்பம் காட்டி முன்செல்வீர்.*

| | |
|---|---|
| † **மாறி வாசித்தல் 17ம் ஞாயிறு தேவ ஆராதனை புத்தகம்** “சங்கீதம் 46” “தேவன் நமக்கு அடைக்கலம்” Psalter Reading – “Psalm 46” | **சபையார் இணைந்து** Congregation |
| † **தந்தை போற்றி** Gloria Patri | **சபையார் இணைந்து** Congregation |
| **துதி ஆராதனை** Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்** Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்** Lord’s Prayer | **சபையார் இணைந்து** Congregation |
| **சிறப்புப் பாடல்** Special Song | **பாடகர் குழு** Choir |
| † **காணிக்கைப் பாடல்** Offertory Song | **சபையார் இணைந்து** Congregation |

### அன்பே பிரதானம்

**அன்பே பிரதானம், சகோதர அன்பே பிரதானம்.**

*1. பண்புறு ஞானம், - பரம நம்பிக்கை,*
*இன்ப விஸ்வாசம் - இவைகளி ளெல்லாம்.*

*2. பலபல பாஷை படித்தறிந்தாலும்,*
*கலகல வென்னும் - கைம்மணியாமே.*

*3. என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்,*
*அன்பிலையானால் - அதிற்பயனில்லை.*

*4. துணிவுட னுடலைச் சுடக்கொடுத்தாலும்,*
*பணிய அன்பில்லால் - பயனதிலில்லை.*

*5. சாந்தமும் தயவும் சகல நற்குணமும்*
*போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள*

*6. புகழிறு மாப்பு, - பொழிவு பொறாமை,*
*பகைய நியாயப் - பாவமுஞ் செய்யா*

*7. சினமடையாது, - தீங்கு முன்னாது,*
*தினமழியாது, - தீமை செய்யாது.*

*8. சகலமுந்தாங்கும், - சகலமும் நம்பும்,*
*மிகைபட வென்றும் - மேன்மை பெற்றோங்கும்.*

| | |
|---|---|
| † **பூலோகத்தாரே யாவரும்** Doxology | **சபையார் இணைந்து** Congregation |
| † **திருமறைப் பாடம்** Scripture Reading **உபாகமம் 24 : 17 - 22** Deuteronomy 24:17-22 | **திரு. மெல்பின்** Mr. Melbin |
| **அருளுரை** Sermon | **மறைதிரு. சுவா சியூ போ** Rev. Chua Chiew Poh |

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

<u>**தாசரே, இத்தாரணியை அன்பாய்**</u>

**தாசரே, இத்தாரணியை அன்பாய்**
**யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்**

**நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்**
**காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,**
**வெளிச்சம் வீசுவோம்**

*1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை,*
*வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,*
*உரித்தாய் யேசு பாவப் பாரத்தை*
*நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே.*

*2, பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்*
*பட்சமாக உதவி செய்வோம்;*
*உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,*
*யேசு கனிந்து, திரிந்தனரே.*

*3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை*
*நீசரை நாம் உயர்த்திடுவோம்;*
*பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,*
*நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே,*

*4. இந்த தேச மாது சிரோமணிகள்*
*விந்தை யொளிக்குள் வரவழைப்போம்;*
*சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,*
*நிர்ப்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட.*

*5. மார்க்கம்தப்பி நடப்போரைச் சத்ய*
*வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்*
*ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,*
*நாம் உழைத்திடுவோம், நாம்*
*ஜெயித்திடுவோம்*

**அறிவிப்புகள்**
Announcements

<u>மனப்பாட வசனங்கள் / Weekly Memory Verses</u>

✝ மனப்பாட வசனங்கள் — **சபையார் இணைந்து**
Weekly Memory Verses — Congregation
***மத்தேயு 3 : 16 -17***
Matthew 3 : 16-17

***16. இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து***
***கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது;***
***தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.***
***17. அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர்***
***என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று***
***உரைத்தது.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** / Indicates Congregation standing